**தலைப்பு - 153 காணி, காணி அபிவிருத்தி அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2013 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கை இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

1 ஆம் பகுதி - அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை

2 ஆம் பகுதி - ஒவ்வொரு தலைப்பிற்குமான விபரமான அறிக்கை

## I ஆம் பகுதி

**காணி, காணி அபிவிருத்தி அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் மீதான சுருக்கமான அறிக்கை**

---

### 1. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்

| தலைப்பு | திணைக்களங்கள் |
|---|---|
| 286 | காணி ஆணையாளர் திணைக்களம் |
| 287 | காணி உரிமை நிர்ணயத் திணைக்களம் |
| 288 | நில அளவைத் திணைக்களம் |
| 327 | காணிப் பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களம் |

## 2. கணக்குகள்

## 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

### மொத்த நிதிஏற்பாடும் செலவும்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 04 திணைக்களங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 5,455,285,640 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை அதில் ரூபா 4,807,663,431 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமைச்சு மற்றும் ஒவ்வொரு திணைக்களங்களின் தேறிய நிதி ஏற்பாடுகளில் சேமிப்பு ரூபா 1,793,803 இற்கும் ரூபா 541,595,589 இற்கும் இடைப்பட்ட விச்சுடைய அளவில் அல்லது தேறிய நிதி ஏற்பாட்டில் 1 சதவீதத்திற்கும் 20 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| தலைப்பு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | சேமிப்புக்கள் தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| 153 | 2,670,181,540 | 2,128,585,951 | 541,595,589 | 20 |
| 286 | 257,730,000 | 253,052,625 | 4,677,375 | 2 |
| 287 | 206,294,100 | 204,500,297 | 1,793,803 | 1 |
| 288 | 2,083,110,000 | 1,991,473,388 | 91,636,612 | 4 |
| 327 | 237,970,000 | 230,051,170 | 7,918,830 | 3 |
| மொத்தம் | **5,455,285,640** | **4,807,663,431** | **647,622,209** | |

## 2.2 வருமானக் கணக்குகள்

**மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

---

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 02 திணைக்களங்களினால் 2013 ஆம் ஆண்டின் போது 02 வருமானக் குறியீடுகளுக்காக ரூபா 157 மில்லியன் தொகையான வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 182 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 9 சதவீதத்திற்கும் 41 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சுடைய சதவீதத்தில் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| **வருமானக் குறியீடு** | **2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | | | **மதிப்பீட்டின் சதவீதமாக மிகை/ (பற்றாக்குறை)** |
|---|---|---|---|---|
| | **மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்** | **உள்ளபடியான வருமானம்** | **மிகை/ (பற்றாக்குறை)** | |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | |
| 20.02.01.03 | 35,000,000 | 49,503,519 | 14,503,519 | 41 |
| 20.03.02.04 | 122,000,000 | 132,827,068 | 10,827,068 | 9 |
| மொத்தம் | 157,000,000 | 182,330,587 | 25,330,587 | |

**2.3 முற்பணக் கணக்குகள்**

-----------------------------------

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 04 திணைக்களங்களின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் என்பன கீழே தரப்படுகின்றது.

| விடய இலக்கம் | செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | உச்ச எல்லை | உள்ளபடி யானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானவை | உச்ச எல்லை | உள்ளபடி யானவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 15301 | 13,000,000 | 8,642,601 | 4,500,000 | 9,426,432 | 50,000,000 | 24,156,453 |
| 28601 | 19,000,000 | 13,657,950 | 11,000,000 | 14,586,514 | 85,000,000 | 50,441,975 |
| 28701 | 18,000,000 | 9,443,070 | 6,500,000 | 8,168,760 | 48,000,000 | 34,719,528 |
| 28801 | 155,000,000 | 96,603,627 | 100,000,000 | 109,124,602 | 492,000,000 | 293,076,656 |
| 32701 | 18,000,000 | 17,534,785 | 6,500,000 | 7,764,354 | 60,000,000 | 43,842,658 |

### 2.4 பொதுவைப்புக் கணக்குகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 03 திணைக்களங்களில் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வைப்புக் கணக்குகளின் மீதி ரூபா 186,293,178 கூட்டுமொத்தமாக இருந்தது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| அமைச்சு / திணைக்களம் | வைப்புக் கணக்கு இலக்கம் | 2013 திசெம்பர் 31 இல் |
|---|---|---|

| | | உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| காணி, காணி அபிவிருத்தி அமைச்சு | 6000/0000/00/0015/0064/000 | 44,999 |
| காணி ஆணையாளர் திணைக்களம் | 6000/0000/00/0015/0141/000 | 69,132,458 |
| நில அளவைத் திணைக்களம் | 6000/0000/00/0003/0214/000 | 115,620,045 |
| காணிப் பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களம் | 6000/0000/00/0015/0186/000 | 1,495,676 |
| | | ---------------- |
| மொத்தம் | | 186,293,178 |
| | | ========== |

**2 ஆம் பகுதி**

-------------------------------

## ஒவ்வொரு தலைப்பிற்குமான விபரமான அறிக்கை

## 1. தலைப்பு 153 – காணி, காணி அபிவிருத்தி அமைச்சு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 திசெம்பர் 04 ஆந் திகதி அமைச்சு செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தெடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல் அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இங்கே (அ) இலிருந்து (இ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 இலிருந்து 1.11 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்படுகின்றது.

**(அ) பாதீட்டு முரண்**

------------------------

06 மூலதன செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 16 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான விச்சினைக் கொண்டிருந்தது.

**(ஆ) கட்டுநிதிக் கணக்குகள்**

--------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதிப்பிரமாணம் 371 இன் படி செயற்பாடு நிறைவு பெற்றதும் உடனடியாக பெறப்பட்ட செயல்நிமித்த உப கட்டு நிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 13 சந்தர்ப்பங்களின் போது பெறப்பட்ட ரூபா189,625 தொகையாக உப கட்டு நிதி 01 மாதத்திற்கும் 06 மாதங்களுக்கும் இடையிலான காலதாமதத்துடன் தீர்க்கப்பட்டிருந்தது.

(ii) நிதிப்பிரமாணம் 371 இன் படி ஒரு பதவி நிலை உத்தியோகத்தருக்கு ஒரு தடவையின் போது வழங்கப்படக்கூடிய ஆகக் கூடிய செயல் நிமித்த உப கட்டுநிதி ரூபா 20,000 ஆக இருந்த போதிலும் அதற்கு முரணாக 04 சந்தர்ப்பங்களின் போது மூன்று உத்தியோகத்தர்களுக்கு ரூபா 20,000 இனை விஞ்சி ரூபா 207,517 கூட்டுத்தொகையான செயல் நிமித்த உப கட்டு நிதி வழங்கப்பட்டிருந்தது.

(iii) 11 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 153,000 கூட்டுத்தொகையான முற்பணத் தொகையிலிருந்து 21 சதவீதம் முதல் 91 சதவீதம் வரையிலான வீச்சில் செலவினங்கள்

மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இரண்டு சந்தர்ப்பங்களின் போது பெறப்பட்ட ரூபா 30,000 தொகையான முற்பணம் செலவிடப்படாது முழுமையாக மீளப் பெறப்பட்டிருந்தமையால் நிதிப் பிரமாணம் 371(4) இல் குறிப்பிடப்பட்ட பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 15301 ஆம் இலக்க முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 219,710 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ii) வேலையை விட்டுச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய 08 வருடங்களைக் கடந்த ரூபா 96,928 தொகையான கடன் மீதி 2014 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

---

### 1.4.1 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

---

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் படி வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

---

(அ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள்

---

அமைச்சினால் 25 வாகனங்கள் முறையற்ற வகையில் காணிப் பயன்பாடு மற்றும் கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் செயற்பாடுகளுக்காக விடுவிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) தீர்க்கப்படாத சொத்துக்கள்

-------------------------------------------

அமைச்சினால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 66,420,067 ஆக இருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 04 செலவின விடயங்களின் ரூபா 405,786 கூட்டுத்தொகையான சேமிப்புக்களை மிகைத்து பொறுப்புக்களிற்கு பிணை நின்றமையினால் நிதியேற்பாட்டை விஞ்சி செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையும் மீளாய்வாண்டின் இறுதி வரையில் 58 சந்தர்ப்பங்களின் போது ரூபா 4,343,749 தொகையான பொறுப்புக்களுக்கு பிணை நின்ற போதிலும் ஒதுக்கீட்டுக் கணக்கில் டீ.ஜீ.எஸ்.ஏ 08 படிவத்தில் அது தொடர்பாகக் குறிப்பிடப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டன.

(ii) அமைச்சினால் 153-02-03-04-2015 என்ற பிம்சவிய நிகழ்ச்சித்திட்ட செலவின விடயத்தின் கீழ் காணி உரிமை நிர்ணயத் திணைக்களத்திற்காக மீளாய்வாண்டில் ரூபா 83,000,000 தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும் மேலும் மீளாய்வாண்டிற்குரிய 2014 ஆம் ஆண்டின் போது செலவிடப்பட்டிருந்த 170 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 1,617,582 தொகையான பொறுப்புக்கள் ஒதுக்கீட்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 இணங்காமைகள்

---------------------------

**(அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை**

-----------------------------------------------------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|---|
| i) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | ரூபா | |
| | நிதிப்பிரமாணம் 103(1) | - | தொடர்புடைய பிரமாணத்தின்படி விபத்தொன்று ஏற்பட்டவுடன் உடனடியாக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் அறிவிக்க வேண்டியிருந்த போதிலும் 2013 செப்தெம்பர் 22 ஆந் திகதி வாகனத்திற்கு ஏற்பட்ட விபத்து 03 நாட்கள் தாமதத்தின் பின்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. |
| | நிதிப்பிரமாணம் 104(3), 104(4) | 309,706 | விபத்து ஏற்பட்டு 07 நாட்களுக்குள் ஆரம்ப அறிக்கையையும், 3 மாதங்களுக்குள் இறுதி அறிக்கையையும் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் 03 வாகனங்களுக்கு ஏற்பட்ட விபத்து தொடர்பாக அந்த அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | நிதிப்பிரமாணம் 104(2) | - | காணாமல் போதல் / நட்டமடைதல் பெறுமதி ரூபா 50,000 இற்கு மேம்படுகின்ற சந்தர்ப்பங்களின் போது அந்த அறிக்கையின் பிரதியொன்று திறைசேரிக்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும் 2013 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ரூபா 50,000 இற்கு மேற்பட்ட காணாமல் போதல் / நட்டமடைதல் 06 சந்தர்ப்பங்கள் தொடர்பாக திறைசேரிக்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. |
| | நிதிப்பிரமாணம் 113(4) | - | அரசாங்க வருமானம் அல்லது |

அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய ஏனைய கட்டணங்களை அறவிடும் உரித்தை கைவிடுவதற்கு அனுமதி வழங்கப்படுவதற்குரிய கடிதத்தின் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.7 செயலாற்றல்

2013 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு, கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கை திட்டத்தின்படி அமைச்சின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### (அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்

(i) கடந்த இரண்டு வருடங்கள் உள்ளடங்கலான மீளாய்வாண்டில் பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் செயல்முன்னேற்றம் பின்வருமாறு இருந்தது.

| வருடம் | நிதிஏற்பாடு | செலவினம் | இலக்கிடப்பட்ட உரிமைச் சான்றிதழின் அளவு | அளக்கப்பட்ட காணிக் கூறுகளின் எண்ணிக்கை | வர்த்தமானி வெளியிடப்பட்ட கூறுகளின் எண்ணிக்கை | பதிவுசெய்யப்பட்ட சான்றிதழின் அளவு |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா மில். | ரூபா மில். | | | | |
| 2011 | 1,000 | 481 | 200,000 | 157,470 | 79,678 | 25,697 |
| 2012 | 1,100 | 416 | 200,000 | 124,717 | 62,130 | 26,386 |
| 2013 | 800 | 670 | 500,000 | 110,630 | 58,690 | 63,943 |
| மொத்தம் | **2,900** | **1,567** | **900,000** | **392,817** | **200,498** | **116,026** |

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

* 2013 ஆம் ஆண்டில் பிம்பிசவிய நிகழ்ச்சித்திட்டத்திற்குரியதாகச் செலவிடப்பட்ட ஒட்டு மொத்தச் செலவினம் ரூபா 670 மில்லியனாக இருந்ததுடன் அதில் நில அளவைத் திணைக்களத்தினதும் காணி ஆணையாளர் திணைக்களத்தினதும் காணிப் பதிவாளர் திணைக்களத்தினதும் பதவியணியினருக்காக ஊக்குவிப்புப் படியாக மாத்திரம் ரூபா 77.7 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. இருந்த போதிலும் கடந்த மூன்று ஆண்டுகளில் செலவிடப்பட்ட செலவினங்களை ஒப்பீடு செய்த போது நிகழ்ச்சித்திட்டத்தின் ஒட்டு மொத்த செயலாற்றல் 21.68 சதவீத குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது.

* 2013 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் படி சான்றிதழ் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்ட காணிக் கூறுகளின் அளவு 500,000 ஆக இருந்த போதிலும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி தீர்மானம் வழங்கப்பட்டு பதிவு செய்யப்பட்டு சான்றிதழ் வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்ட காணிக் கூறுகளின் அளவு 135,000 ஆக இருந்தது. 2013 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட உரித்துறுதிச் சான்றிதழ்களின் அளவு 63,943 அதாவது 47.4 சதவீதமாக இருந்ததுடன் அதனை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது செயல்முன்னேற்றம் அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்ட போதிலும் வருடாந்த இலக்குடன் ஒப்பீடு செய்த போது 32.5 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. மேலும், அவ்வாறு வழங்கப்பட்ட சான்றிதழ்களுக்கிடையே 2013 ஆம் ஆண்டிற்கு முன்னைய ஆண்டுகளில் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்படாத அளவுகளுக்குரிய சான்றிதழ்களும் உள்ளடங்கியிருந்தது.

* அளத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட காணிகளில் அனேகமானவை எல்லைக் காணி உரிமையாளர்கள் இணங்காமை, வழக்கு நடவடிக்கைகள் நடைபெறுகின்றமை, உரிமையாளர்கள் முன்வராமை மற்றும் ஏனைய பல்வேறு காரணங்களினால் காணிக் கோவைகளில் எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருந்ததுடன் அந்தக் கோவைகள் தொடர்பாக எடுக்கக்கூடிய எதிர்கால

நடவடிக்கைகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

* மீளாய்வாண்டில் நில அளவைத் திணைக்களத்தினால் அளக்கப்பட்ட காணிக் கூறுகளின் எண்ணிக்கை 110,630 ஆக இருந்த போதிலும் தீர்ப்புக்கள் பகிரங்கப்படுத்தப்பட்ட காணிக் கூறுகளின் எண்ணிக்கை 58,690 ஆகவும் பதிவாளர் நாயகம் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட காணிக் கூறுகளின் எண்ணிக்கை 52,542 ஆகவும் இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ii) 2013 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கையில் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் யுத்தத்தினால் இடம்பெயர்ந்தவர்களை மீளக் குடியமர்த்துவதற்குரிய காணிப் பிரச்சினைகளைத் தீர்த்தல் தொடர்பான சிபாரிசுகளை அமுல்படுத்தும் செயல்முன்னேற்றம் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

* 2013 ஆம் ஆண்டில் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை அமுல்படுத்துவதற்காக நிதியேற்பாடு செய்யப்பட்ட ரூபா 400 மில்லியனில் ரூபா 39.7 மில்லியன் மாத்திரம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் யுத்தத்தினால் இடம்பெயர்ந்தவர்களை மீளக் குடியமர்த்துவதற்குரிய காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக செலவிடப்பட்டிருந்தது.

ஆணைக்குழுவின் சிபாரிசுகளை அமுல்படுத்தலின் செயல்முன்னேற்றம் பின்வருமாறு இருந்தது.

| | விண்ணப்பம் கிடைத்த அளவு | தீர்க்கப்பட்ட அளவு | தீர்ப்பதற்கு எஞ்சியுள்ள அளவு | தீர்க்கப்பட்ட அளவு சதவீதமாக |
|---|---|---|---|---|
| குடியிருப்பதற்கான காணி விண்ணப்பம் | 96,060 | 16,181 | 79,879 | 16.8 |

| | | | | |
|---|---|---|---|---|
| பதிவேடுகளை ஒழுங்குபடுத்துதல் | 31,621 | 2,471 | 29,150 | 7.8 |
| ஏனைய காணிப் பிரச்சினைகள் | 27,372 | 4,593 | 22,779 | 16.8 |
| | ------------ | ----------- | ------------ | |
| மொத்தம் | 155,053 | 23,245 | 131,808 | **14.9** |
| | ======= | ======= | ======= | |

இதன்படி சிபாரிசுகளை அமுல்படுத்தும் ஒட்டுமொத்த செயல் முன்னேற்றம் 14.9 சதவீதமான கீழ் மட்டத்தில் காணப்படுகின்றமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(iii) அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்காக காணிகளைச் சுவீகரிப்பதற்கு 2013 ஆம் ஆண்டிற்காக ரூபா 1,300 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 1,252 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் ஒவ்வொரு மாவட்டங்களிலும் கைப்பற்றப்பட்டவைகளின் செயல்முன்னேற்றம் செயலாற்றல் அறிக்கையில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) அமைச்சில் 2008 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய தற்போது அமுல்படுத்தப்படுகின்ற காணிகளை கைப்பற்றும் கோவைகளின் எண்ணிக்கை 1,563 ஆக இருந்ததுடன் அதில் 1,207 எண்ணிக்கை 2013 ஆம் ஆண்டிற்குரிய கோவைகளாகும். மேலும் இழப்பீடு செலுத்தி வேலை பூர்த்தி செய்யப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை 76 ஆக இருந்ததுடன் கைவிடப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை 79 ஆகும்.

**(ஆ) திட்டமிடல்**

(i) வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயற்படாமை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

* 2013 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் பிம்சவிய நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துதல் மற்றும் காணி கைப்பற்றுதல் இழப்பீட்டுப் பிரிவின் செயற்பாடுகளை

அமுல்படுத்துதல் தொடர்பில் தவிர அமைச்சின் ஏனைய செயற்பாடுகளுக்குரிய காணிக் கொள்கை, வழங்கல் மற்றும் அமுல்படுத்துதல், அரசாங்க காணிகளின் முகாமைத்துவம், சரியான அளவை வரைபடங்கள் மற்றும் அளவிடைத் தகவல்கள் சேவைகள், காணி பயன்படுத்தல் திட்டம் மற்றும் அமுல்படுத்தல், காணி தொடர்பான தேசிய தரவு முறைமையினை அமுல்படுத்தல் போன்ற அமைச்சின் நடவடிக்கைகள் தொடர்பாக உரிய கவனம் செலுத்தி திட்டம் தயாரிக்கப்படாமையினால் செயலாற்றல் அறிக்கையில் செயல்முன்னேற்றத்தை செயல்நடவடிக்கைத் திட்டத்துடன் ஒப்பீடு செய்ய முடியாதிருந்தது.

* 2013 ஆம் ஆண்டின் அமைச்சின் செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரிக்கும் போது கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசினை அமுல்படுத்துவதற்கு எதிர்பார்த்த இலக்கு உள்ளடக்கியிருக்கவில்லை.

*. அமைச்சின் செயல்நடவடிக்கைத் திட்டத்தைத் தயாரிக்கும் போது சில செயற்பாடுகள் தொடர்பாக அமைச்சின் கீழுள்ள ஏனைய திணைக்களங்களின் செயல்நடவடிக்கைத் திட்டம் தொடர்பாக உரிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. அதனால் அமைச்சின் இலக்கு மற்றம் திணைக்களத்தின் இலக்குகள் என்பவற்றிக்கிடையே கீழே காணப்படுகின்ற பிரகாரம் பரஸ்பர வேறுபாடுகள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

| திணைக்களம் | செயற்பாடுகள் | இலக்கு<br>அமைச்சின் பிரகாரம் | <br>திணைக்களத்தின் பிரகாரம் |
|---|---|---|---|
| காணி உரிமை நிர்ணயத் திணைக்களம் | புலனாய்வு செய்வதற்கு எதிர்பார்த்த கூறுகளின் எண்ணிக்கை | 135,000 | 224,280 |
| | உரித்துச்சான்றிதழ்கள் வழங்குவதற்கு எதிர்பார்த்த அளவு | 135,000 | 134,568 |

| | | | |
|---|---|---|---|
| நில அளவைத் திணைக்களம் | அளப்பதற்கு எதிர்பார்த்த நிலக்கூறுகளின் எண்ணிக்கை | 147,000 | 184,500 |

**1.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---------------------------------------------------------------

பிம்சவிய நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக அறிவிக்கும் நோக்கில் 2013 ஆம் ஆண்டில் தேசத்திற்கு மகுடம் கணகாட்சியின் போது பகிர்ந்தளிப்பதற்காக 150,000 துண்டுப் பிரசுரங்கள் அச்சிடுவதற்காக மேலதிக செயலாளரின் (பிம்சவிய) 2013 பெப்ரவரி 05 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் ஆகக்குறைந்த விலை சமர்ப்பித்த நிறுவனத்திற்கு 2013 மார்ச் 01 ஆந் திகதிக்கு முன்னர் உரிய துண்டுப் பிரசுரங்களின் இருப்பு அச்சிடப்பட்டு அமைச்சிற்கு கையளிக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதும் அந்த விலைகளுக்காக கொள்வனவுக் குழுவின் மேல் அங்கீகாரம் 2013 மே 07 ஆந் திகதியே வழங்கப்பட்டிருந்தது. அதன்படி கொள்வனவுத் தேவை உரிய காலத்தில் இனங்காணப்படாமல் கொள்வனவுக் குழுவின் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு முன்னர் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**1.9 நட்டமும் இழப்பும்**

-----------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டங்களும் இழப்புக்களும் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காணப்படுகின்றன.

(அ) டீ.ஜீ.எஸ்.ஏ.7 மற்றும் 7(1) படிவங்களில் ஆண்டின் போது ஏற்பட்ட இழப்பு நட்டங்களுக்காக முறையே ரூபா 2,137,534 தொகை மற்றும் ரூபா 233,915 தொகையான பெறுமதி 2012 ஆம் ஆண்டிற்குரியதாக இருந்ததுடன் 2013 ஆம் ஆண்டின் 07 நட்ட இழப்புச் சம்பவங்களின் பெறுமதி ரூபா 1,343,799 ஆக இருந்த போதிலும் இது தொடர்பாக டீ.ஜீ.எஸ்.ஏ.7 மற்றும் 7(1) படிவங்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 திசெம்பர் 18 ஆந் திகதி விபத்திற்குள்ளாகிய வாகனமொன்று ரூபா 71,721 தொகைக்கு பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் காப்புறுதி இழப்பீடாக காப்புறுதி நிறுவனத்திலிருந்து ரூபா 64,037 தொகை மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 7,684 தொகையான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

**1.10 முகாமைத்துவ நலிவுகள்**

-----------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2010 மே 14 அந் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் அரசாங்க செலவினக் முகாமைத்துவம் தொடர்பான கடிதத்தின் 03 ஆவது பந்தியின்படி அமைச்சர்களின் பாவனைக்காகவும் பாதுகாப்பு நடவடிக்கைக்காகவும் ஒதுக்கப்படக்கூடிய ஆகக்கூடிய உத்தியோகபூர்வ வாகனங்களின் எண்ணிக்கை 03 இற்கு வரையறுக்கப்படுகின்ற போதிலும் அந்த ஏற்பாடுகளுக்குப் முரணாக அமைச்சினால் விடயப் பொறுப்பு அமைச்சருக்கு 08 உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) 2013 ஆம் ஆண்டின் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களில் சேவையாற்றுகின்ற இலங்கை நிர்வாக சேவையின் 2010 மற்றும் 2011 ஆம் தொகுதிகளில் உள்ள உத்தியோகத்தர்களுக்காக மாதாந்த பிரபுத்த சங்வாத மண்டபம் எனும் பெயரிலான 09 செயலமர்வுகளுக்காக ரூபா 540,000 அளவிலான தொகை ஒன்று செலவிடப்பட்டிருந்ததது. அந்த நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கு பற்றிய உத்தியோகத்தர்களுக்கு 2013 ஆம் ஆண்டின் போது செயலமர்வுகளுக்கு உரித்தற்ற 30 வகையுடைய 203 நூற்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 292,565 தொகை அமைச்சின் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகளிலிருந்து செலவிடப்பட்டிருந்தது. மேலும், புத்தகங்களை பெற்ற உத்தியோகத்தர்களின் பெயர்ப்பட்டியல் உரிய பிரகாரம் நாளதுவரையாக பேணப்பட்டிராததுடன் வழங்கப்பட்ட புதிய கதைகள் மற்றும் குறுங்கதைகள் போன்ற புத்தகங்களின் தன்மையின் பிரகாரம் அதிலிருந்து பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்த்த விளைவுகள் எத்தகையது என கணக்காய்விற்கு விளக்கமளிக்கப்பட்டிருக்க வில்லை.

**1.11 மனித வளங்கள் முகாமைத்துவம்**

---------------------------------------------------

**(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

------------------------------------------------------------------------------------------------------------

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 20 | 17 | 03 |
| (ii) | மூன்றாம் நிலை | 06 | 05 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 420 | 392 | 28 |
| (iv) | ஆரம்ப நிலை | 48 | 44 | 04 |
| | மொத்தம் | 494 | 458 | 36 |

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 36 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2. தலைப்பு 286 - காணி ஆணையாளர் திணைக்களம்

---

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

---

காணி ஆணையாளர் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் வருமானக் கணக்கு என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 திசெம்பர் 17 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குகிடைக்கப் பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 2.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் பதிவேடுகளின் பிரகாரம் காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பன இங்கே (அ) இலிருந்து (ஈ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 2.4 இலிருந்து 2.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்படுகின்றது.

(அ) பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 06 செலவின விடயங்களிற்காக மிகை ஏற்பாடு செய்யப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 12 சதவீதம் முதல் 89 சதவீதம் வரையிலான வீச்சைக் கொண்டிருந்தது.

(ii) வாடகை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் வரிகளுக்காக குறிப்பான மதிப்பீடொன்று தயாரிக்கப்பட முடியுமான போதிலும் செலவின விடய இலக்கம் 286-02-01-1404 இன் கீழ் அதற்காக ரூபா 1,215,000 தேறிய ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ஆண்டின் இறுதியில் ரூபா 584,795 தொகை அதாவது 48 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் செலவினங்கள் அதிகரிக்காமை சேமிப்பதற்கான காரணமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கட்டு நிதிக் கணக்கு

நிதிப்பிரமாணம் 371 இன் படி செயற்பாடு நிறைவு பெற்றதும் உடனடியாக பெறப்பட்ட செயல் நிமித்த உப கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் 21 சந்தர்ப்பங்களின் போது செயற்பாடுகள் நிறைவடைந்து 26 நாட்கள் முதல் 66 நாட்கள் வரையிலான கால தாமதத்தின் பின்னர் செயல் நிமித்த உப கட்டு நிதி தீர்க்கப்பட்டிருந்ததுடன் ஏற்படுகின்ற செலவினம் தொடர்பாக சரியான

எதிர்வுகூறலின்றி செயற்பட்டமையின் காரணமாக 16 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்டிருந்த முற்பணத்திலிருந்து தீர்ப்பதற்கு இருந்த மீதி 23 சதவீதம் முதல் 66 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டன.

(இ) வருமானக் கணக்குகள்

-----------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திணைக்களத்தினால் 2013 ஆம் ஆண்டிற்கான குறியீட்டு இலக்கம் 20.02.01.03 இற்காக ரூபா 35 மில்லியன் வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 50 மில்லியன் கூட்டுத்தொகை அதாவது மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 143 சதவீதம் சேகரிக்கப்பட்டிருந்தது.

(ii) சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்கு இலக்கம் 20.02.01.03 இன் படி ரூபா 11,818,745 கூட்டுத்தொகையான வருமானம் நிலுவையாக இருந்ததுடன் அந்த நிலுவை வருமானம் 01 வருடம் முதல் 03 வருடங்களுக்கிடையிலான காலப்பகுதிக்குரியதாகும். அந்த நிலுவை வருமானத்தை அறவிடும் பின் தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(iii) நிதிப் பிரமாணம் 85(1) (இ) மற்றும் 2002 யூலை 17 ஆந் திகதிய 01/2002 ஆம் இலக்க அரசிறைக் கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் சுற்றறிக்கையின் மூலம் வருமானங்கள் இயலுமானவரை சரியாக எதிர்வு கூறப்பட வேண்டுமென நிர்ணயிக்கப்பட்டிருந்ததுடன் 2014 சனவரி 07 ஆந் திகதிய அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 235/2013 ஆம் இலக்கத்தின் 04.1 ஆம் பந்தியின் மூலமும் இது தொடர்பாக கவனம் செலுத்துமாறு சகல கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது. முன்னைய 5 ஆண்டுகளின் வருமான மதிப்பீடு மற்றும் உள்ளபடியான வருமானம் தொடர்பான பரீட்சிப்பின் போது திணைக்களம் தொடர்ச்சியாக குறை வருமான மதிப்பீடு தயாரித்திருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருடம் | வருமான மதிப்பீடு | உள்ளபடியான வருமானம் | வருமான மதிப்பீட்டை விஞ்சி சேகரிக்கப்பட்ட வருமானம் | மதிப்பீட்டின் சதவீதமாக மதிப்பீட்டை விஞ்சி சேகரிக்கப்பட்ட வருமானம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| 2008 | 11,543,976 | 18,709,654 | 7,165,678 | 62 |
| 2009 | 10,699,290 | 23,084,289 | 12,384,999 | 115 |
| 2010 | 15,000,000 | 17,425,204 | 2,425,204 | 16 |
| 2011 | 16,000,000 | 28,854,745 | 12,854,745 | 80 |
| 2012 | 25,000,000 | 34,690,642 | 9,690,642 | 39 |
| 2013 | 35,000,000 | 49,503,519 | 14,503,519 | 41 |

(iv) திணைக்களத்தினால் நாட்டில் அரசாங்கத்திற்குச் சொந்தமான மொத்தக் காணியின் அளவு, குத்தகைக்கு வழங்கப்பட்ட மொத்தக் காணியின் அளவு மற்றும் வருமானம் அறவிடப்படுகின்ற முறை தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய பதிவேடு பேணப்படாதிருந்தமையினால் ஆண்டின் வருமானம், சேகரிக்க வேண்டிய தேறிய வருமானம் மற்றும் நிலுவை வருமானம் சரியானதா என உறுதிப்படுத்திக்கொள்வதற்கோ அல்லது அறவீடு தொடர்பான நிலைமை சரியானதா என உறுதிப்படுதிக்கொள்வாற்கோ முடியாதிருந்தது.

(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 28601 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,922,487 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ii) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பண கணக்கின் மீதி ரூபா 50,532,945 ஆக இருந்த போதிலும் திறைசேரி அச்சிடல் குறிப்பின் படி மீதி ரூபா 50,738,733 ஆனமையால் ரூபா 205,788 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

## 2.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 2.4.1 தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

திணைக்களத்தினால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 2,931,340 ஆக இருந்ததுடன் அவை அனைத்தும் 01 வருடத்திற்குக் குறைவானதாகும். மேலும் 11 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 192,424 தொகையான பொறுப்புக்கள் 2013 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டுக் கணக்கில் டீ.ஜீ.எஸ்.ஏ.08 படிவத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 இணக்கமின்மைகள்

### (அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| **(i) பொது நிர்வாகச் சுற்றறிக்கை** | |
| 2008 யூன் 01 ஆந் திகதிய 2008/13 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 1.3.1 (1) ஆம் பந்தி | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக குழுப் போக்குவரத்து வசதிகள் உரித்தற்ற உத்தியோகத்தர்களுக்காக போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட்டிருந்ததுடன் இரண்டு பிரயாண இடங்களுக்கிடையே செல்வதற்கும் வருவதற்கும் 50 கிலோ மீற்றரை விஞ்சி போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட்டிருந்தது. |

(ii) அமைச்சுச் சுற்றறிக்கை

| | |
|---|---|
| 2010 மார்ச் 24 ஆந் திகதிய 02/2010 ஆம் இலக்க அமைச்சுச் சுற்றறிக்கை<br>(i) 01,03,04,05 ஆம் பந்திகள் | வாகன சுற்றறிக்கையின் ஏற்பாடுகளைக் கவனத்தில் கொள்ளாது குழுப் போக்குவரத்திற்காக ஈடுபடுத்தப்பட்ட சில வாகனங்களின் மைலோ மீற்றர் செயற்பாடற்றிருக்கும் போது போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் சில வாகனங்களுக்குரிய ஓட்ட அட்டவணை முறையாகப் பேணப்பட்டிருக்காகவும் இல்லை. |

## 2.6 செயலாற்றல்

2013 இன் வருடாந்த செயற்திட்டத்தின்படி திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காணப்படுகின்றன.

(அ) செயலாற்றல் அறிக்கையில் காணப்படுகின்ற ஒவ்வொரு நடவடிக்கைகளினதும் வருடாந்த இலக்குகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்

மாகாணங்களுக்கிடையிலான நீர்ப்பாசனம், காணி அபிவிருத்திச் செயற்திட்டம் மற்றும் மாகாண மட்டத்தில் அரசாங்கத்தின் காணிப் பிணக்குகளைத் தீர்க்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டில் 1500 பிணக்குகளைத் தீர்ப்பதற்கு செயல்நடவடிக்கைத் திட்டத்தின்படி தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் 1246 பிணக்குகள் மாத்திரமே தீர்க்கப்பட்டிருந்தன. மேலும், முன்னைய ஆண்டின் இறுதியில் தீர்ப்பதற்கிருந்த பிணக்குகள் 2143 ஆகக் காணப்பட்டதுடன் இந்த ஆண்டின் 4862 உடன் 2013 ஆம் ஆண்டின் மொத்தப் பிணக்குகளின் எண்ணிக்கை 7005 ஆனமையால் ஆண்டின் போது காணப்பட்ட பிணக்குகளின் எண்ணிக்கையில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட அளவு 18 சதவீதமான சிறிய அளவினையே கொண்டிருந்தது.

(இ) திட்டமிடல்

----------------

வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கிணங்க செயற்படாமை

------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் சந்தர்ப்பங்களின் போது செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயற்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(i) காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் உரித்துப் பத்திரம் விநியோகித்தல்

------------------------------------------------------------------------------------------------------------

30,000 ரன்பிம உரித்துப் பத்திரங்களை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் செயலாற்றல் அறிக்கையில் அதன் அளவு 10,000 ஆகக் காணப்பட்டிருந்தது. இதனிடையே மீளாய்வாண்டில் விநியோகிகக்ப்பட்ட ரன்பிம உரித்துப் பத்திரங்கள் 6582 மாத்திரமாக இருந்தது.

(ii) காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம் மற்றும் காணி விடுவித்தல் கட்டளைச் சட்டத்தின் கீழ் உரித்துப் பத்திரம் வழங்குதல்

------------------------------------------------------------------------------------------------------------------------

காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் நடுத்தர உரித்துப் பத்திரம் 45 இனை வழங்குவதற்கு வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின்படி இலக்கிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது 19 உரித்துப் பத்திரங்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன.

(iii) ரேகா சித்திரம் வழங்குதல்

---------------------------------------------

2013 ஆம் ஆண்டிற்குரிய ரேகா சித்திரங்களுக்குரிய முழுமையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் 41 பிரதேச செயலகங்களின் தகவல்களின் படி ரேகா சித்திரங்கள் விநியோகித்தலின் செயல் முன்னேற்றம் கீழ் மட்டத்தில் காணப்பட்டது.

| ஆண்டு | முன்கொண்டுவரப்பட்ட ரேகா சித்திரங்களின் அளவு | ரேகா சித்திரங்களின் விண்ணப்பங்களின் அளவு | கிடைத்த ரேகா சித்திரங்களின் அளவு | கொடுப்பனவுப் பத்திரம் தயாரிப்பதற்குள்ள மொத்த ரேகா சித்திரங்களின் அளவு | கொடுப்பனவுப் பத்திரம் தயாரிக்கப்பட்ட ரேகா சித்திரங்களின் அளவு | கொடுப்பனவுப் பத்திரம் தயாரிக்கப் படாத ரேகா சித்திரங்களின் அளவு | கொடுப்பனவுப் பத்திரம் தயாரிப்பதற்கு எஞ்சியுள்ள ரேகா சித்திரங்களின் அளவு |
|---|---|---|---|---|---|---|---|
| -------- | -------- | -------- | -------- | -------- | -------- | -------- | -------- |
| 2013 | 5,717 | சமர்ப்பிக்கப்படவில்லை | 853 | 6,570 | 1,003 | 1,338 | 4,229 |

## 2.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தது. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பங்களில் சில கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) கொள்வனவு வழிகாட்டி நடைமுறைகளைப் பின்பற்றாமை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) திணைக்கள கொள்வனவுக் குழுவினால் தளபாட உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்காக தீர்மானிக்கப்பட்ட காலப்பகுதியில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(ii) தேவை பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட 5 விடயங்களுக்குரிய 54 தளபாட உபகரணங்கள் தேவைக்கு மேலதிகமாக கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் உரிய கலை எல்லையினை விட தாமதித்து வழங்கப்பட்ட தளபாட உபகரணங்களுக்காக தாமத நாட்களின் எண்ணிக்கைக்காக எந்தத் தொகையும் அறவிடப்படாது இருந்ததுடன் ஒப்பந்தம் கையளிக்கும் போது மேற்கூறப்பட்ட நிபந்தனைகள் மற்றும் மாதிரிகளுக்கிணங்காத அல்லது தரத்தில் குறைவான பொருட்கள் வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அந்தப் பொருட்கள் வழங்குதல்

தொடர்பாக பின்பற்றப்பட்ட நடைமுறைகள் ஒப்பந்த நிபந்தனை உடன்படிக்கையில் உள்ளடக்கப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(iii) 2013 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட 355 பொருள் விடயங்கள் 2014 மே 31 ஆம் திகதி வரையிலும் காணி ஆணையாளர் அலுவலகங்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஊக்குவிப்புப்படி செலுத்துதல்

---

அனுமதிப்பத்திரம், உரித்துப் பத்திரம் மற்றும் நீண்ட கால அனுமதிப்பத்திரம் விநியோகித்தலுக்காக இந்த ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் 2012 ஆம் ஆண்டிற்குரிய 2013 ஆம் ஆண்டில் தலைமை அலுவலகத்திற்கு மாத்திரம் ரூபா 1,186,240 தொகை ஊக்குவிப்புப் படியாக செலுத்தப்பட்டிருந்ததுடன் அதன் ஒட்டு மொத்த பெறுமதியில் 70 சதவீதம் அதாவது ரூபா 826,995 தொகை மூண்று உத்தியோகத்தருக்கிடையே பகிரப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) அனுமதிப்பத்திரம், கொடுப்பனவுப் பத்திரம் மற்றும் நீண்ட கால அனுமதிப்பத்திரம் விநியோகித்தல் திணைக்களத்தின் அடிப்படை நோக்காக இருந்த போதிலும் உயர் மட்ட முகாமைத்துவத்தின் சில உத்தியோகத்தர்களுக்காக மாத்திரம் உயர் சதவீதத்தில் உரித்தாகும் வகையில் இந்த ஊக்குவிப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.

(ii) தலைமை அலுவலகத்தில் 173 பதவியணியினரில் ஊக்குவிப்புக் கொடுப்பனவிற்காக உரித்தைப் பெற்ற உத்தியோகத்தர்கள் 13 மாத்திரமாக இருந்ததுடன் கொடுப்பனவு பகிரப்படும் முறை உரிய பிரிவுத் தலைவரின் தீர்மானத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டமையினால் அந்த உத்தியோகத்தரிடையும் ஊக்குவிப்புப்படி பகிர்ந்தளித்தல் அசாதாரண முரண்பாடாகக் காணப்பட்டது.

(iii) இலக்கிடப்பட்ட காணிக்கூறுகளின் எண்ணிக்கைக்கு மேற்படுகின்ற ஒரு நிலக் கூறுக்காக ரூபா 640 வீதம் படியொன்று செலுத்துவதற்கு நிறுவனப் பணிப்பாளரின் அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும் தொடர்புடைய தரப்பினர்களுக்கிடையே ஊக்குவிப்புக் கொடுப்பனவு

பகிரப்படும் முறை தொடர்பாக அமைச்சின் செயலாளருக்கு அறிவித்து அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 2.8 நட்டம் மற்றும் இழப்பு

------------------------------------

ஒதுக்கீட்டுக் கணக்கின் டீ.ஜீ.எஸ்.ஏ 7 படிவத்தின்படி 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 987,042 தொகையினை மேலும் அறவிடுவதற்கோ அல்லது பதிவழிப்பதற்கோ அல்லது கைவிடுவதற்கோ உள்ள 05 சந்தர்ப்பங்களில் ரூபா 700,164 தொகையான 02 சம்பவங்கள் 03 வருடங்களுக்கு மேற்பட்டிருந்ததுடன் அதனை அறவிடுவதற்கோ அல்லது பதிவழிப்பதற்கோ 2014 மே 31 ஆந் திகதி வரையிலும் போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.9 முகாமைத்துவ நலிவுகள்

----------------------------------------

(அ) கிரிந்தி ஓயா வீடமைப்பு கடன் செயற்திட்டம்

-----------------------------------------------------------------------

1993 ஆம் ஆண்டில் கிரிந்தி ஓயா வீடமைப்பு கடன் செயற்திட்டத்தின் கீழ் 1436 குடியிருப்பாளர்களுக்காக மானிய முறைமையின் கீழ் ரூபா 11,603,000 தொகையான கடன் வழங்கப்பட்டிருந்ததுடன் 2013 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட நிலைமை மற்றும் அறவிடல் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு இருந்தது.

(i) 20 வருடங்கள் அளவிலான காலத்தின் போது மேற்கூறப்பட்ட கடன்தொகையில் 68 சதவீதம் அதாவது ரூபா7,850,425 தொகை மாத்திரம் அறிவிடப்பட்டிருந்ததுடன் 2013 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 3,752,575 தொகை அதாவது 32 சதவீதம் நிலுவைக் கடன் மீதியாக இருந்தது.

(ii) 2013 ஆம் ஆண்டில் 3 சதவீதமான குறைந்த கடன் அளவு அறவிடப்பட்டிருந்ததுடன் கடன் அறவிடல்களின் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ஆ) உத்தியோகபூர்வ இல்லம்

----------------------------------------

உத்தியோகபூர்வ இல்லங்களின் குடியிருக்கும் நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | குடியிருக்கும் நிலைமை | | நிலுவையாகக் காணப்பட்ட | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பிரதேச அலுவலகம் | வாடகை அறவிடப்படுகின்ற | அலுவலகம் நடாத்தப்படுகின்ற | பழுதுபார்க்கப்பட சேண்டிய | அழிடைந்துள்ள | அனுமதியற்ற | ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட | மொத்த எண்ணிக்கை |
| மொனராகலை | 6 | 0 | 1 | 3 | 0 | 4 | 14 |
| கந்தளாய் | 2 | 0 | 4 | 0 | 0 | 0 | 6 |
| திருகொணமலை | 5 | 0 | 0 | 3 | 0 | 4 | 12 |
| தெபரவெவ | 21 | 0 | 6 | 0 | 0 | 3 | 30 |
| மகியங்கனை | 6 | 9 | 7 | 4 | 3 | 12 | 41 |
| அம்பாறை | 8 | 1 | 11 | 3 | 7 | 12 | 42 |
| பொலன்னறுவை | 32 | 3 | 10 | 2 | 7 | 9 | 63 |
| அனுராதபுரம் | 11 | 17 | 23 | 14 | 12 | 14 | 91 |
| மொத்தம் | 91 | 30 | 62 | 29 | 29 | 58 | 299 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திணைக்களத்திற்குச் சொந்தமாகக் காணப்படுகின்ற 299 உத்தியோகபூர்வ இல்லங்களில் வாடகை அறவிடப்படுகின்ற வீடுகளின் எண்ணிக்கை 91 ஆகும். அதாவது மொத்த வீட்டு எண்ணிக்கையில் 30 சதவீதம் மாத்திரம் வாடகை அறவிடப்படுகின்றமையினால் வீட்டு வாடகை அறவிடுதல் மிகவும் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ii) எஞ்சிய 208 உத்தியோகபூர்வ இல்லங்களில் 62 வீடுகள் திருத்தக்கூடிய நிலையிலும், 29 வீடுகள் அழிவடைந்த நிலையிலும் காணப்படுகின்றமையால் மொத்த உத்தியோகபூர்வ இல்லங்களில் 30 சதவீதம் விளைவற்றுக் காணப்பட்டது.

(iii) மேலும், அனுமதியற்ற குடியிருப்பாளரொருவர் 29 உத்தியோகபூர்வ இல்லங்களில் வசித்து வருவதுடன் அந்த உத்தியோகபூர்வ இல்லங்களிலிருந்து அந்த நபர்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அதிலிருந்து எந்த வருமானத்தையும் உழைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.10 மனித வளங்கள் முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 48 | 29 | 19 |
| (ii) | மூன்றாம் நிலை | 38 | 14 | 24 |
| (iii) | இரண்டாம் நிலை | 695 | 428 | 267 |
| (iv) | ஆரம்ப நிலை | 119 | 81 | 38 |
| | மொத்தம் | 900 | 552 | 348 |

## 3. தலைப்பு 287 – காணி உரிமை நிர்ணயத் திணைக்களம்

## 3.1 கணக்காய்வின் நோக்கெல்லை

காணி உரிமை நிர்ணயத் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 திசெம்பர் 04 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப் பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 3.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல் அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 3.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் காணி உரிமை நிர்ணயத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றுக்களும் இங்கே (அ) முதல் (ஈ) வரையிலான பொது அவதானிப்புக்கள் மற்றும் 3.4 இலிருந்து 3.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்படுகின்றது.

(அ) பாதீட்டு முரண்கள்

03 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு செய்யப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 10 சதவீதம் முதல் 53 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் பயன்பாடு

பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்திற்காக காணி, காணி அபிவிருத்தி அமைச்சினால் ரூபா 83,000,000 கூட்டுத்தொகையான நிதியேற்பாடு காணி உரிமை நிர்ணயத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதியேற்பாடுகளிலிருந்து

ரூபா 66,286,951 கூட்டுத்தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 16,713,049 தொகை அதாவது 20 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

(இ) கட்டுநிதிக் கணக்குகள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதிப்பிரமாணம் 371 இன் படி செயற்பாடு நிறைவு பெற்றதும் உடனடியாக பெறப்பட்ட செயல்நிமித்த உபகட்டு நிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 29 சந்தர்ப்பங்களின் போது உரிய செயற்பாடுகள் நிறைவு பெற்று 21 தினங்கள் முதல் 160 தினங்கள் வரையிலான தாமதத்தின் பின்னர் ரூபா 446,972 தொகையான உப கட்டுநிதி தீர்க்கப்பட்டிருந்தது.

(ii) நிதிப்பிரமாணம் 371(4) இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்குக் இணங்காத வகையில் நடவடிக்கை எடுத்த காரணத்தினால் 4 சந்தர்ப்பங்களின் போது ரூபா 39,491 கூட்டுத்தொகையான முற்பணம் முழுமையாக மீளத் தீர்க்கப்பட்டிருந்ததுடன் 02 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 40,0000 தொகையான முற்பணத் தொகையிலிருந்து சிறு அளவு மாத்திரம் செலவிடப்பட்டு தீர்க்கப்பட்டிருந்தது. அதன்படி செயல்நிமித்த உப கட்டு நிதி வழங்கி நடவடிக்கைகளை நிறைவேற்றும் போது நிதிப் பிரமாணம் 71 இன் ஏற்பாடுகளை கவனத்தில் கொள்ளாது நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 28701 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்கு தொடர்பான 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றின்படி அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 947,376 ஆகும். அந்த நிலுவை மீதியை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ii) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகைக்கும் திணைக்கள கட்டுப்பாட்டுக் கணக்கிற்கும் இடையே ரூபா 9,913 தொகையான வேறுபாடு அவதனிக்கப்பட்டதுடன் அந்த வேறுபாட்டிற்கான காரணம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) ஒரு உத்தியோகத்தரின் விஷேட, விழா மற்றும் இடர்கடன் மீதிகள் முறையே ரூபா 1,250 ரூபா 3,500 மற்றும் ரூபா 92,430 ஆக இருந்ததுடன் 2013 யூலை மாதத்திலிருந்து அந்த உத்தியோகத்தரிடமிருந்து தவணைப்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 3.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

---

#### 3.4.1 உள்ளகக் கணக்காய்வு

---

திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்படாதிருந்துடன் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினாலும் போதியளவான உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

---

(அ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

---

(i) 02 செலவின விடயங்களுக்குரிய ரூபா 388,859 தொகையான சேமிப்பினை விஞ்சி பொறுப்புக்களுக்கு கடப்பாடு நிதியேற்பாட்டை விஞ்சி செலவினங்கள் செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) மீளாய்வாண்டின் இறுதி வரையில் 10 சந்தர்ப்பங்களின் போது ரூபா 188,169 தொகையான பொறுப்புக்களுக்கு கடப்பாடு ஒதுக்கீட்டுக் கணக்கில் டீ.ஜீ.எஸ்.ஏ 8 படிவத்தில் அது தொடர்பாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

## 3.6 செயலாற்றல்

2013 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு, கூட்டினைந்த திட்டம், செயல் நடவடிக்கைத் திட்டத்தின்படி திணைக்களத்தின் செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### (அ) போதியளவில் நிறை வேற்றப்படாத பிரதான பணிகள்

1931 ஒக்தோபர் 23 ஆந் திகதிய காணி நிர்ணய கட்டளைச் சட்டத்தின்படி திணைக்களம் பிரதான பணிகளை போதியளவில் நிறைவேற்றாதிருந்ததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் சில கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) 1931 ஒக்தோபர் 23 ஆந் திகதிய காணி நிர்ணய கட்டளைச் சட்டத்தின்படி திணைக்களத்தின் அடிப்படை நோக்கம், உரித்து விண்ணப்பம் கோரல், புலனாய்வு நடவடிக்கைகளைச் செய்தல் மற்றும் விடுவித்தல் என்பவற்றை உள்ளடக்கிய நடவடிக்கைகளைச் செய்வதுடன் நிர்ணயிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற கிராமங்கள் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| **விபரம்** | **கிராமங்களின் எண்ணிக்கை** |
|---|---|
| நிர்ணயித்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்ற | 70 |
| இறுதி அறிக்கை தயாரிக்கப்படுகின்ற | 06 |
| வடக்கு கிழக்கு மாகாணங்களில் அறிவித்தல் பகிரங்கப்படுத்தப்பட்ட | 30 |
| அறிவித்தல் பகிரங்கப்படுத்தப்பட்டிருந்தும் பதிவேடுகள் தொலைந்த | 57 |
| இறுதி அறிக்கை வழங்கப்பட்ட | 25 |
| மொத்தம் | 188 |

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

* பகிரங்கப்படுத்தப்பட்ட போதும் பதிவேடுகள் காணாமல் போன 57 கிராமங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் நிச்சயமற்ற நிலையில் காணப்பட்டது.

(ii) நிர்ணயித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற 70 கிராமங்கள் தொடர்பான நிலை பின்வருமாறு இருந்தது.

| **செயலாற்றல்** | **பணிகளை நிறைவேற்றுதல் (கிராமங்களின் எண்ணிக்கை)** |
|---|---|
| காணிக் கூறுகளின் அளவை மாற்றுதல் நில அளவையாளர் நாயகத்திற்கு அனுப்புதல் | 05 |
| காணிக் கூறுகளின் அளவைகளை மாற்றுதல் மற்றும் நிர்ணயக் கட்டளைகளுக்காக ஏற்பாடுகளைத் தயாரித்தல் | 37 |
| நிர்ணயித்தல் கட்டளை காணிப் பதிவாளருக்கு அனுப்புதல் | 09 |
| நிர்ணயித்தல் கட்டளை அமைச்சிற்கு அனுப்புதல் | 03 |
| நிர்ணயித்தல் கட்டளை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு உள்ளவை | 16 |
| மொத்தம் | 70 |

(ஆ) திட்டமிடல்

(i) வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் கூட்டிணைந்த திட்டத்திற்கு இணங்காமை

பின்வரும் சந்தர்ப்பங்களின் போது தயாரிக்கப்பட்ட வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் கூட்டிணைந்த திட்டத்துடன் இணங்கியிருக்கவில்லை.

* பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2013 ஆம் ஆண்டின் போது திறைசேரியினால் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 500,000

நிலக்கூறுகளுக்காக உரித்துச் சான்றிதழ் விநியோகிக்க வேண்டியிருந்த போதிலும் திணைக்களம் 97,000 காணிக்கூறுகளுக்காக மாத்திரம் பிம்சவிய சான்றிதழ் வழங்குவதற்கு இலக்கிட்டிருந்தது.

* கீழே காண்பிக்கப்படுகின்ற பிரகாரம் பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தில் 2013 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட இலக்கிடப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றுதல் நலிவான நிலையில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

| விபரம் | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி இலக்கிடப்பட்ட நோக்கம் (ஒட்டுமொத்த காணிக்கூறு) | செயலாற்றல் அறிக்கையின் படி 2013 ஆம் ஆண்டின் செயல்முன்னேற்றம் (காணிக்கூறு) |
|---|---|---|
| ------------------- | ------------------- | ------------------- |
| வெளிக்கள புலனாய்வு | 224,280 | காண்பிக்கப்படவில்லை |
| காணி பதிவுசெய்தல் பரீட்சிப்பு | 168,208 | காண்பிக்கப்படவில்லை |
| காணி உரிமை நிர்ணயித்தல் ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்ட காணிக் கூறுகளின் எண்ணிக்கை | 134,568 | 71,315 |
| வர்த்தமானில் இடப்பட்ட கூறுகளின் எண்ணிக்கை | 134,568 | 58,690 |
| காணிப் பதிவாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்ட கூறுகளின் எண்ணிக்கை | 67,284 | 52,542 |

* திணைக்களத்தினால் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி 14 ஆவது பிரிவின் கீழ் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட கூறுகளின் எண்ணிக்கை 134,568 ஆக இருந்த போதிலும் 58,690 கூறுகள் அதாவது 44 சதவீதம் மாத்திரம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

* நில அளவைத் திணைக்களத்தினால் அளக்கப்பட்ட 104,173 கூறுகள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் காணிப் பதிவாளர்

நாயகத்திற்கு அதில் 52,542 கூறுகள் அதாவது 50 சதவீதம் மாத்திரமே அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

## 3.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தது. அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) கொள்வனவு வழிகாட்டி நடைமுறைகளைப் பின்பற்றாமை

வாகனமொன்று ரூபா 111,680 தொகை செலவில் பழுதுபார்க்கப்பட்டிருந்ததுடன் கேள்வி திறப்பதற்கு முன்னர் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன்படி கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.6 ஆம் பந்தி 6.3.3 ஆம் பந்தியின் படி நடவடிக்கை எடுக்காதிருந்தமையும் முறையான அங்கீகாரமின்றி வாகனம் பழுதுபார்க்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டன. மேலும் மேற்கொள்ளப்பட்ட பழுதுபார்த்தலுக்காக உரிய நிறுவனத்திலிருந்து உத்தரவாதச் சான்றிதழும் விநியோகிக்கப்படவுமில்லை.

## 3.8 நட்டமும் இழப்பும்

2012 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டுக் கணக்கில் நட்டம் மற்றும் கைவிடல்களின் கீழ் விபத்திற்குள்ளாகிய சந்தர்ப்பத்தில் நட்ட இழப்பு ரூபா 1,200,975 ஆகக் காண்பிக்கப்பட்ட வாகனமொன்று 2013 ஆம் ஆண்டின் போது திணைக்களத்தின் நிதியேற்பாட்டிலிருந்து ரூபா 571,006 தொகை செலவிடப்பட்டு பழுதுபார்க்கப்பட்டிருந்தது. இந்த வாகனத்திற்காக காப்புறுதி உரித்து வழங்கல் நிராகரிக்கப்பட்டிருந்ததுடன் நட்டத்திற்கு பொறுப்பானவர்களிடமிருந்து அறவிடல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இருந்த போதிலும் இனங்காணப்பட்ட நட்ட இழப்பின் பெறுமதிக்காக மேலும் அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு இருந்த பெறுமதி ரூபா 571,006 ஆக மீளாய்வாண்டின் ஒதுக்கீட்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு இருந்த நட்டமாக காண்பிக்கப்பட்ட ரூபா 22,250 தொகை தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்படாதிந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3.9 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2014 பெப்ரவரி 03 ஆந் திகதி முதல் புத்தளம் அலுவலகத்திற்கு கையளிக்கப்பட்ட 62-4097 ஆம் இலக்க லேண்ரோவர் ஜீப் வண்டி 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 579,623 தொகை மற்றும் ரூபா 293,300 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் 2014 ஆம் ஆண்டில் மார்ச் மாதத்தின் போது ரூபா 148,000 தொகை செலவில் மீண்டும் திருத்தம் செய்யப்பட்டிருந்தது. அதன்படி ஜீப் வண்டியின் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் உரிய தொழில்நுட்ப மதிப்பீட்டுடன் செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்படவில்லை.

## 3.10 மனித வளங்கள் முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவயணியினரும் வெற்றிடங்களின் எண்ணிக்கையும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | பதவியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளினஎண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 103 | 15 | 88 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 05 | 02 | 03 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 1296 | 387 | 909 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 320 | 156 | 164 | - |
| (v) | ஏனையோர் (அமையம்/ தற்காலிகம்/ ஒப்பந்த அடிப்படை) | - | 26 | - | 26 |
| | மொத்தம் | 1724 | 586 | 1164 | 36 |

திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் வெற்றிடங்களின் ஊழியர் எண்ணிக்கை 68 சதவீதமாக இருந்ததுடன் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் ஒப்பந்த அடிப்படையில் 26 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்

**4. தலைப்பு 288 –நில அளவைத் திணைக்களம்**

---

**4.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

---

நில அளவைத் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கும் வருமானக் கணக்கும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 திசெம்பர் 05 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குக்கிடைக்கப் பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**4.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, இணக்க கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய

உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 4.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

-----------------------------------------------

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் நில அளவைத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்க கூற்று இங்கே (அ) இலிருந்து (உ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 4.4 இலிருந்து 4.11 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

(அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

--------------------------------------------------------------------------------

திணைக்களத்தினால் நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் பதிவேடு முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) பாதீட்டு முரண்கள்

-------------------------------

15 செலவின விடயங்களுக்காக மிகை நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமான நிதியேற்பாட்டை பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 10 சதவீதம் முதல் 57 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

(இ) பொது வைப்புக் கணக்கு

------------------------------------------

2013 ஆம் ஆண்டில் நில அளவைக் கட்டணமாக வைப்புக் கணக்கில் உள்ள பணத்தில் ரூபா 90,572,220 தொகை ஊக்குவிப்புப் படியாக செலுத்தப்பட்டிருந்ததுடன் பிரயாணச் செலவினம், எரிபொருள் மற்றும் ஏனைய செலவினங்களுக்காகவும் 2013 ஆம் ஆண்டில் வருடாந்த பாதீட்டின் மூலம் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதும் அந்த நிதியேற்பாடுகளுக்கு மேலதிகமாக பொது வைப்புக் கணக்கிலிருந்து ரூபா 18,655,614 தொகையான பிரயாணச் செலவினம், எரிபொருள் மற்றும் ஏனைய செலவினங்களுக்காக 2013 ஆம் ஆண்டின் போது செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) வருமானக் கணக்கு

-----------------------------------

மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்

-------------------------------------------------------------------------------

திணைக்களத்தினால் 2013 ஆம் ஆண்டில் வருமானக் குறியீட்டு இலக்கம் 20.03.02.04 இற்காக மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 122 மில்லியனாக இருந்ததுடன் ஆண்டின் போது ரூபா 133.8 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் முறையே 11 சதவீதம், 14 சதவீதம் மற்றும் 23 சதவீதங்களாக வருமான அதிகரிப்பு காணப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் வருமான அதிகரிப்பு மிகவும் குறைவான மட்டத்தில் அதாவது 1 சதவீதமாக இருந்தது.

(ii) சில நில அளவைகளுக்கான கட்டணங்களில் 50 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டமையும் அத்தொகை ஊக்குவிப்புப்படி மற்றும் ஏனைய செலவினங்களுக்காக ஈடுபடுத்துவதற்கும், சில விஷேட செயற்திட்ட நில அளவை கட்டணங்களில் அரசாங்க வருமானத்திற்கு எத்தொகையும் செலவுவைக்கப்படாது முழுக்கட்டண அளவிற்கு ஊக்குவிப்புப் படி செலுத்துவதற்கு பயன்படுத்தப்பட்டமையும் வருமானம் குறைவடைந்தமைக்கு தாக்கமளித்த பிரதான காரணங்களாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. இவ்வாறு நுவரெலியா மாவட்டத்தில் சீன அபிவிருத்தி வங்கி உதவி செயற்திட்டத்தின் கீழ் கிடைத்த ரூபா 2,979,469 தொகை முழுவதும் ஊக்குவிப்புப்படி செலுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(iii) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை வருமானம் ரூபா 25,160 ஆக இருந்தது.

(உ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

---

28801 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,529,766 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

## 4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

---

(அ) ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) வனவள மற்றும் சுற்றாடல் அமைச்சினால் 4 வாகனங்கள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அவை வழங்கப்பட்ட திகதி தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் அந்த வாகனங்கள் உரியவாறு கையளிக்கப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(ii) பிம்சவிய நிதியேற்பாட்டின் மூலம் ரூபா 82 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட திணைக்களத்தின் கட்டிடம் மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட நில அளவை உபகரணங்களை உள்ளடக்கிய பல்வேறு மூலதனச் சொத்துக்கள், காணி, காணி அபிவிருத்தி அமைச்சிலிருந்து கையேற்கப்படாமல் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

(ஆ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

---

(i) 13 செலவின விடயங்களுக்குரிய சேமிப்பை விஞ்சி ரூபா 17,345,762 தொகையான பொறுப்புக்களுக்காக பிணை வைக்கப்பட்டிருந்தது.

(ii) 197 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 14,819,738 கூட்டுத்தொகையான பொறுப்புக்கள் மீளாய்வாண்டின் ஒதுக்கீட்டுக் கணக்கில் டீ.ஜீ.எஸ்.ஏ. 8 படிவத்தில் காண்பிக்கப்படாதிருந்ததுடன் தியதலாவ நில அளவை பயிற்சி நிறுவனத்தில் 62 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 983,868 தொகை வடமத்திய மாகாணத்தில் எந்த பொறுப்புக்களும் அந்த படிவத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.5 இணக்கமின்மைகள்

### (அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | |
| (i) நிதிப்பிரமாணம் 105(5) | 1,159,141 | கண்டி மாவட்ட நில அளவை அலுவலகத்திற்கு புதிய கட்டிடமொன்றை நிர்மாணிக்கும் போது காப்புறுதி மேவுகையொன்று பெறப்படாமையின் காரணமாக அந்தக் கட்டிடத்திற்கு அருகிலுள்ள பாதுகாப்பு சுவர் உடைந்து விழுந்தமையால் ஏற்பட்ட நட்டத்தைக் குறைப்பதற்கு முடியாதிருந்தது. |
| (ii) நிதிப்பிரமாணம் 208(ஈ) | - | காணி, காணி அபிவிருத்தி அமைச்சுச் செயலாளரின் முன் அங்கீகாரமின்றி கண்டி மாவட்ட நில அளவை அலுவலகத்தின் புதிய இரண்டு மாடிக் கட்டிடத்திற்கு அருகில் அமைந்துள்ள பாதுகாப்புச் சுவர் |

நிர்மாணிப்பதற்காக பிம்சவிய நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது.

**4.6 செயலாற்றல்**

-----------------------

2013 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு செயல்நடவடிக்கைத் திட்டத்தின்படி திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**4.6.1 திட்டமிடல்**

-----------------

(அ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயற்படாமை

------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் சந்தர்ப்பங்களின் போது திணைக்களத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயற்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) உரிமைகளைப் பதிவுசெய்யும் அளத்தல் பிரிவு

------------------------------------------------------------------------

2013 ஆம் ஆண்டில் ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் படி 500,000 பிம்சவிய உரிமைச் சான்றிதழ் பத்திரங்கள் விநியோகிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும் திணைக்கள செயல்நடவடிக்கைத் திட்டத்தின்படி 147,000 நிலக்கூறுகள் அளக்கப்பட்டு கூறிடல் நில வரைபடம் தயாரிப்பது நோக்கமாக இருந்ததுடன் செயலாற்றல் அறிக்கையின்படி வேலை பூர்த்திசெய்யப்பட்டு உரிமை நிர்ணயித்தல் ஆணையாளருக்கு 110,630 நிலக்கூறுகள் மாத்திரமே அனுப்பப்பட்டிருந்தது.

(i) பிம்சவிய 2010 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை நிகழ்ச்சித்திட்டத்தின் இலக்குகள் மற்றும் திணைக்களத்தின் செயல்முன்னேற்றத்தைக் காண்பிக்கின்ற அட்டவணையொன்று கீழே காண்பிக்கப்படுகின்றது.

| ஆண்டு | இலக்கு (பிம்சவிய சான்றிதழ்) ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் படி | நில அளவைத் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் |
|---|---|---|
| 2010 | 100,000 | 168,444 |
| 2011 | 150,000 | 158,538 |
| 2012 | 200,000 | 124,727 |
| 2013 | 500,000 | 110,630 |

2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் போது இலக்கினை அடையாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) பரீட்சைகள் பிரிவின் செயல்முன்னேற்றம்

(i) 2013 ஆம் ஆண்டில் தியதலாவ நில அளவை பயிற்சி நிறுவனத்தின் மூலம் 22 பரீட்சைகளை நடாத்துவதற்கு செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியாக 2013 ஆம் ஆண்டில் 10 பரீட்சைகளை மாத்திரமே நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ii) வரைபட தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான பரீட்சை 2013 செப்தெம்பர் 28 மற்றும் 29 ஆகிய இரு தினங்களிலும் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக எந்தவொரு விண்ணப்பதாரிகளும் வருகைதராத போதிலும் அதற்காக ரூபா 31,680 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 4.7 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

**திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள்/ ஊழியர்களுக்கான ஊக்குவிப்புப்படி முறைமை**

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையிலானதாக இருந்தது. தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள்/ ஊழியர்களுக்காக ஊக்குவிப்புப்படித் திட்டமொன்று தேசிய சம்பள மற்றும் ஆளணி ஆணைக்குழுவின் சிபாரிசின் பிரகாரம் நிறுவன பணிப்பாளர் நாயகத்தினால் அவரின் 2008 நவம்பர் 03 மற்றும் 2009 சனவரி 05 ஆந் திகதிய ஆ/8/3/706/272/27 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் ஊக்குவிப்புப்படி செலுத்தப்படுகின்றமையும், அதற்காக விநியோகிக்கப்பட்ட 2009 சனவரி 09 ஆந் திகதிய 01/2009 ஆம் இலக்க உள்ளக சுற்றறிக்கை மூன்று சந்தர்ப்பங்களின் போது திருத்தப்பட்டிருந்த போதிலும் அதற்காக நிறுவனப் பணிப்பாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. தாபனவிதிக் கோவையின் XI ஆம் அத்தியாயத்தின் 2.2.4 ஆம் பந்தியின் பிரகாரம் திணைக்களத்தினால் கட்டணமொன்று அறவிடப்பட்டு அந்த சேவை நிறைவேற்றும் போது அந்த மொத்த வருமானமும் திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், விஷேட செயற்திட்ட அளவை வருமானத்தில் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 20,986,598 தொகையும் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 19,554,907 தொகையும் திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்படாது ஊக்குவிப்புப் படியாக உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) இந்த ஊக்குவிப்புப் படித்தொகை அங்கீகரிக்கும் போது திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்படுகின்ற மேற்பார்வைக் கட்டணம், பிம்சவிய ஊக்குவிப்புப்படி, ஜப்பான் சர்வதேச புரிந்துணர்வு நிறுவனம் (JICA) செயற்திட்டத்தின் கடமைகளை நிறைவேற்றுகின்ற உத்தியோகத்தர்களுக்கு அடிப்படைச் சம்பளத்தில் 10 சதவீதப்படி, குழுப்படி, உபகரணங்களைக் கவனிக்கும்படி, எரிபொருள் மற்றும் பிரயாணச் செலவினம், வீட்டுவாடகை போன்றவை கவனத்தில் கொள்ளப்படாதிருந்ததுடன் திணைக்களத்தில் உத்தியோகத்தர்கள் 2013 ஆம் ஆண்டின் போது தமது அடிப்படைச் சம்பளத்திற்கு ஒப்பீடாக உழைத்திருந்த விபரம் பின்வருமாறு இருந்தது.

| சம்பளத்திற்கு ஒப்பீடாக வருடாந்த உழைப்பு சதவீதம் | உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 100-200 | 33 |
| 200-300 | 23 |
| 300-400 | 11 |
| 400-500 | 05 |
| 500-600 | 01 |

ஊக்குவிப்புப்படி செலுத்தும்படி நில அளவையாளர் ஒருவருக்கு மாதாந்தம் நிறைவேற்ற வேண்டிய ஆகக் குறைந்த வேளையின் அளவு 30 கூறுகளாக (Monthly Norms) தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் மாதமொன்றிற்கு ஊக்குவிப்புப்படி மற்றும் மேற்பார்வைக் கட்டணம் செலுத்துவதற்குரிய செய்யப்படவேண்டிய ஆகக்கூடிய கூறுகளின் எண்ணிக்கை தொடர்பாக வரையறையின்றி 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் ஊக்குவிப்ப்படி செலுத்தப்பட்டிருந்தன.

(இ) ஊக்குவிப்புப்படி செலுத்துவதற்காக பாதீட்டு மதிப்பீட்டில் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததாக நில அளவையாளர் நாயகத்தின் 2011 யூலை 06 ஆந் திகதிய ஐ/கணக்குகள் /போதே/02/11/315 ஆம் இலக்க கடிதத்தில் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் வைப்புக் கணக்கைப் பயன்படுத்தி ஊக்குவிப்புப் படி செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. நிறுவன பணிப்பாளர் நாயகத்தின் 2013 யூலை 05 ஆந் திகதிய EST/8/ALLOW/03/272/28 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் காணப்பட்ட ஊக்குவிப்புப்படி முறைமையினை திரும்பவும் மீளாய்வு செய்து தேசிய சம்பளம் மற்றும் ஆளணி ஆணைக்குழுவிற்கு அறிவிக்குமாறு காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2014 நவம்பர் 20 ஆந் திகதி வரையும் இது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

(அ) கொள்வனவு வழிகாட்டிக் கோவை நடைமுறைகளைப் பின்பற்றாமை

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தது. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(i) கண்டி மாவட்ட நில அளவை அலுவலகத்தின் புதிய இரண்டு மாடிக் கட்டிடத்திற்கு அருகில் பாதுகாப்பு சுவர் நிர்மாணம் ரூபா 1,159,141

கண்டி மாவட்ட நில அளவை அலுவலகத்தின் புதிய இரண்டு மாடிக் கட்டிட நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொண்ட நிறுவனத்திற்கே எல்லை மதிலை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் திறந்த கூறு விலைகள் கோரப்படாமல் கையளிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.1(ஆ) iv ஆம் பந்தியில் காணப்படுகின்ற பிரகாரம் ஒப்பந்தத்தை மேற்பார்வை செய்தல் மற்றும் நிருவகித்தல் போன்ற செயற்பாடுகளுக்காக பொறியியலாளர் ஒருவரை அல்லது மதியுரையாளர் ஒருவரை சேவையில் ஈடுபடுத்துவதற்கு கொள்வனவு நிறுவனம் எதிர்பார்க்குமாயின் பொறியியலாளரின் அல்லது மதியுரையாளரின் அதிகாரப் பொறுப்பு மற்றும் நோக்கங்கள் ஒப்பந்த நிறுவனத்துடன் செய்து கொள்ளப்பட்ட வரைவு உடன்படிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மிஹித்த மெதுர சுற்றாடலில் நில அளவையாளர் திணைக்களத்தின் மூலம் வரைபடங்களை விற்பனை செய்யும் நிலையம் ஒன்றை நிர்மாணித்தல் மற்றும் அதனைப் பேணிச் செல்லல்

திணைக்களத்தின் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டில் இருந்து ரூபா 400,000 தொகை முறையான அங்கீகாரமின்றி காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் விற்பனை கருமபீடத்தை நிர்மாணிப்பதற்கு செலவிடப்பட்டிருந்தது. மேலும் வரைபடம் விற்பனை செய்யப்பட்டதன் பின்னர் பணம் செலுத்தும் அடிப்படையில் 2013 யூலை 30 ஆந் திகதி வரையில் ரூபா 51,632

பெறுமதியான வரைபடங்களின் இருப்பொன்று அமைச்சுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக இரு தரப்பினர்களுக்குமிடையே எவ்வித எழுத்து மூல உடன்படிக்கையும் கைச்சாத்திடப்படாதிருந்தமையும் வருமானம் மிகவும் குறைந்தமையினால் போதியளவான வருமானமொன்றை உழைக்க முடியுமா என்பது தொடர்பாக சாத்தியவள ஆய்வின்றி இந்த கருமபீடம் நிர்மாணிக்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

## 4.9 நட்டமும் இழப்பும்

-------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட இழப்பு மற்றும் நட்டங்கள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) 1984 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலத்தில் 15 சந்தர்ப்பங்களின் போது ஏற்பட்ட நட்ட இழப்புக்களுக்காக ரூபா 1,865,873 தொகை மீளாய்வுவாண்டின் போது பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மேலும் அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு இருந்த 10 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 258,589 தொகை மற்றும் 2013 ஆம் ஆண்டின் போது 06 சந்தர்ப்பங்களில் ஏற்பட்ட ரூபா 142,000 தொகையான வாகன விபத்துக்களுக்குரிய நட்ட இழப்பு மீதி போக்குவரத்துப் பிரிவின் பட்டோலையின் படி 2013 ஆம் ஆண்டிற்கு முன் ஏற்பட்ட 16 விபத்துச் சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 1,420,908 தொகையான நட்ட இழப்பும் 2013 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டுக் கணக்கில் டீ.ஜீ.எஸ்.ஏ 7(i) படிவத்தில் கைவிடப்பட்டிருந்தது.

(இ) மேலும் அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு இருந்ததாக காண்பிக்கப்பட்ட அரசாங்கத்தின் பொருட்களுக்கான நட்ட இழப்பு மற்றும் வாகன விபத்துக்களில் ஏற்பட்ட நட்டம் தொடர்பான காலப்பகுப்பாய்வு பின்வருமாறு இருந்தது.

| காலப்பகுதி | செயற்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | செயற்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் நட்டங்களின் பெறுமதி ரூபா | அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் நட்டங்களின் பெறுமதி ரூபா |
|---|---|---|---|---|
| 1 வருடத்திற்குக் குறைவு | 07 | 227,306 | 11 | 893,189 |
| 1 - 5 வருடங்களுக்கிடையில் | 10 | 803,652 | 32 | 2,993,527 |
| 6 - 10 வருடங்களுக்கிடையில் | - | - | 07 | 927,718 |
| 11 - 15 வருடங்களுக்கிடையில் | 03 | 428,133 | 05 | 556,305 |
| 16 - 20 வருடங்களுக்கிடையில் | - | - | 02 | 118,450 |
| 20 வருடங்களுக்கு மேல் | 06 | 1,017,291 | - | - |
| | | 2,476,382 | | 5,489,189 |

(ஈ) 2013 பெப்ரவரி 23 ஆந் திகதி விபத்திற்குள்ளாகிய வாகனமொன்றுக்காக நிதிப்பிரமாணம் 104(4) இன் கீழ் நட்டம் தொடர்பான இறுதி அறிக்கையில் நட்டம் ரூபா 1,298,792ஆக அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் ஒதுக்கீட்டுக் கணக்கில் நட்டம் ரூபா 479,720 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) வாகன விபத்து மற்றும் அரசாங்கத்தின் பொருட்களுக்கு சேதம் ஏற்பட்ட 06 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 498,291 தொகையை பொறுப்புவாய்ந்தவர்களிடமிருந்து அறவிடுவதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) தகைமைபெறாத ஊழியர்களுக்கு வாகனங்களை பயன்படுத்துவதற்கு இடமளித்தல், சாரதியினால் கவனமின்றி வாகனம் ஓடியமை, விபத்து தொடர்பாக அந்த சந்தர்ப்பத்திலேயே பொலிசுக்கு அறிவிக்காமை, பொறுப்புவாய்ந்த தரப்பினரிடமிருந்து நட்ட இழப்பை அறவிடுவதற்கு நடவடிக்கை

எடுக்காதிருந்த 07 சந்தர்ப்பங்கள் 2013 ஆம் ஆண்டின் வாகன விபத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(எ) அரசாங்க வாகனங்களை காப்புறுதி செய்வதன் மூலம் ஏற்படுகின்ற நட்ட இழப்பை இழிவுபடுத்த முடியுமான போதிலும், வாகன விபத்துக்களுக்குரிய பொறுப்புவாய்ந்த வெளித்தரப்பினரிடமிருந்து நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்த 07 சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டதுடன் இதன் காரணமாக காப்புறுதி உரித்து பெறாமையால் கிடைக்கின்ற மிகையூதிய படியும் (Bonus Claim) நிறுவனத்தால் இழக்கப்பட்டிருந்தது.

**4.10 முகாமைத்துவ நலிவுகள்**

------------------------------------------

திணைக்களத்தால் கைவிரல் அடையாள இயந்திரமொன்று ஈடுபடுத்தி பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளிச் செல்கைகளைப் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் வருகை அறிக்கையில் வருகை, வெளிச் செல்கை விளக்கமாக பேணப்படாதிருந்ததுடன் போலியான கையொப்பம் இடப்பட்டிருந்த போதிலும் உறுதிப்படுத்துவதற்காக பொறுப்பவாய்ச்த உத்தியோகத்தரினால் மேற்பார்வை செய்யப்பட்டிருக்கவில்லை.

**4.11 மனித வளங்கள் முகாமைத்துவம்**

-------------------------------------------------------

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களின் எண்ணிக்கையும்**

-----------------------------------------------------------------------------------------------------------------------

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | பதவியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளினஎண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 104 | 95 | 09 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 1098 | 778 | 320 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 1175 | 804 | 371 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 4871 | 3226 | 1645 | - |
| (v) | ஏனையோர் (அமையம்/ தற்காலிகம்/ ஒப்பந்த அடிப்படை) | - | 01 | - | 01 |
| | மொத்தம் | 7248 | 4904 | 2345 | 01 |

திணைக்களத்தின் மொத்த பதவியணியினரில் 32 சதவீத வெற்றிடம் காணப்பட்டதுடன் நிர்வாக உத்தியோகத்தர் பதவி 2012 ஆம் ஆண்டு முதல் 2014 நவம்பர் மாதம் வரையும் ஒப்பந்த அடிப்படையில் பேணப்பட்டிருந்தது.

## 05. தலைப்பு 327 – காணிப் பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களம்

### 5.1 கணக்காய்வின் நோக்கெல்லை

காணிப் பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 திசெம்பர் 25 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப் பெற்றுள்ள

பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 5.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல் அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 5.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் காணிப் பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பன இங்கே (அ) இலிருந்து (ஆ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 5.4 இலிருந்து 5.9 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்படுகின்றது.

(அ) பாதீட்டு முரண்கள்

04 செலவின விடயங்களுக்காக மிகை நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 12 சதவீதம் முதல் 62 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

(ஆ) பொது வைப்புக் கணக்குகள்

வடக்கின் வசந்தம் மற்றும் கிழக்கின் நவோதய நிகழ்ச்சித்திட்டத்திற்காக இலங்கை முதலீட்டுச் சபையிலிருந்து கிடைத்து பொது வைப்புக் கணக்கில் உள்ளடக்கப்பட்ட 02 வருடங்களை விஞ்சிய ரூபா 98,057 தொகையிலிருந்து மீளாய்வாண்டின் போது வாகன பழுதுபார்த்தலுக்காக ரூபா 48,797 தொகையும், டோனர் மற்றும் காட்ரிஜ் கொள்வனவுகளுக்கான ரூபா 49,260 தொகையும் செலவிடப்பட்டிருந்ததுடன் உரிய செலவின விடயங்களில் நிதியேற்பாட்டில் சேமிப்புக் காணப்படாமையும் அவதானிக்கப்பட்டது.

## 5.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 5.4.1 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுட்டறிக்கையின் படி வருடாந்தக் கொள்வனவுத் திட்டம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.4.2 உள்ளகக் கணக்காய்வு

திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு செயற்படாதிருந்ததுடன் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட போதிலும் அது போதியளவாகக் காணப்படவில்லை.

## 5.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

(அ) விளைவற்ற மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

132 கணனி மற்றும் உபபாகங்கள், 193 அலுவலக உபகரணங்கள் மற்றும் 94 தளபாடங்களும் பொருத்திகளும் செயற்பாடற்று அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) வருடாந்தப் பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

(i) பணிப்பாளர் நாயகத்தின் 2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/மெய் மெய்யாய்வுச் சபை/01 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் படி 2013 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு 2014 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் அந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் திணைக்களம் 2014 நவம்பர் 28 ஆந் திகதி வரையிலும் 10 மாவட்ட அலுவலகங்களுக்குரிய அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் போது ரூபா 6,026,451 பெறுமதியான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2012 ஆம் ஆண்டின் போதும் இந்த நிலைமை அவதானிக்கப்பட்டது.

(இ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்

காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் 25 வாகனங்கள் திணைக்களத்தினால் முறையான பிரகாரம் கையேற்கப்படாமல் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

திணைக்களத்தினால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 308,379 ஆக இருந்ததுடன் அந்தப் பொறுப்புக்கள் ஒரு வருடத்திற்கு குறைந்த காலத்திற்குரியதாகும். இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் இறுதிவரையில் 25 சந்தர்ப்பங்களில் ரூபா 974,877 கூட்டுத்தொகையான பொறுப்புக்களுக்கு பிணை நின்றதுடன் ஒதுக்கீட்டுக் கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட டீ.ஜீ.எஸ்.ஏ.8 படிவத்தில் அது தொடர்பாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ii) 5 செலவின விடயங்களுக்குரிய ரூபா 682,910 சேமிப்பினை விஞ்சி பொறுப்புக்களுக்கு பிணை நின்றமையினால் நிதியேற்பாட்டை மிகைத்து செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

## 5.6 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான இனங்காமைகள்**

2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் 2009 யூன் 17 ஆந் திகதிய 09/2009 (I) ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கைகளின் பிரகாரம், சகல அரசாங்க ஊழியர்களினதும் வருகை மற்றும் வெளிச் செல்கையை உறுதிப்படுத்துவதற்காக கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தில் 68 பதவியணியினர் இருந்த போதிலும் 2014 நவம்பர் 20 வரையும் கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5.7 செயற்திட்டத்தை அமுலாக்குவதில் நலிவுகள்

(அ) செயற்திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம்

(i) கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சினை அமுல்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக திணைக்களத்திற்கு ரூபா 15 மில்லியன் நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 4,125,320 தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் பிரதேச மட்டத்தில் 79 அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையில் 62 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

(ii) 8 மாவட்டங்களில் வெளிக்கள நடவடிக்கைகளுக்காக 1: 10,000 அளவில் வரைபடங்களை நாளதுவரையாக்குவதற்காக திணைக்களம் மேவுகை செய்யப்பட வேண்டிய வரைபடங்களின் எண்ணிக்கை 759 ஆக இருந்த போதிலும் 02 மாவட்டங்களில் 33 வரைபடங்கள் மாத்திரம் பூர்த்திசெய்யப்பட்டிருந்தன.

## 5.8 செயலாற்றல்

2013 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்

(அ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டின் போது பாடசாலை மாணவர்களுக்கும் சமூகத்திற்கும் அறிவூட்டும் 800 நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் 654 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டத்தின்படி 166 பிரதேச காணிப் பயன்பாட்டு திட்டமிடல் அறிக்கை விநியோகிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் செயலாற்றல் அறிக்கையில் அதன் செயல்முன்னேற்றம் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.9 மனித வளங்கள் முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களின் எண்ணிக்கையும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | பதவியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 11 | 06 | 05 |
| (ii) | மூன்றாம் நிலை | 27 | 17 | 10 |
| (iii) | இரண்டாம் நிலை | 585 | 477 | 108 |
| (iv) | ஆரம்ப நிலை | 69 | 66 | 03 |
| | மொத்தம் | 692 | 566 | 126 |

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 126 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.